https://etamil.thehindu.com/

ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின்

# அரியலூர் பிஏசி ராமசாமி ராஜா ஐடிஐ தேசிய அளவில் இடம்பிடித்து சாதனை

● மத்திய அரசு அங்கீகாரம்

**சென்னை**

நாட்டிலேயே சிறந்த தனியார் ஐடிஐ-களில், ராம்கோ சிமெண்ட்ஸின் அரியலூர் பிஏசி ராமசாமி ராஜா ஐடிஐ நிறுவனம் 3-வது இடம்பிடித்து சாதனை படைத்துள்ளது.

இதுதொடர்பாக ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி:

தமிழகத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான அரியலூரில் பிஏசி ராமசாமி ராஜா ஐடிஐ தொழிற்பயிற்சி நிலையத்தை ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் கடந்த 2010-ல் தொடங்கியது.

ராம்கோ நிறுவனத்தின் சிமெண்ட் ஆலை வளாகத்தில் ஏற்கெனவே சிபிஎஸ்இ பள்ளி ஒன்று நடத்தப்படுகிறது. அது தவிர, மாணவ, மாணவிகளின் தொழில் திறனை மேம்படுத்தும் வகையில், இந்த ஐடிஐ-க்கும் ராம்கோ நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியில் இருந்து தொகை செலவிடப்படுகிறது. ஐடிஐ மாணவர்களுக்கு சிமெண்ட் ஆலையிலும் செய்முறை பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் 90 சதவீத தேர்ச்சி, 80 சதவீத மாணவர்களுக்கு வளாக நேர்காணல் மூலம் வேலைவாய்ப்பு என்று இந்த நிறுவனம் தொடர் சாதனை படைத்து வருகிறது. ஐஎஸ்ஓ 29990: 2010 சர்வதேச தரச்சான்றையும் இந்நிறுவனம் பெற்றுள்ளது.

▼ **சமூகப் பொறுப்பு நிதி வாயிலாக ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் எடுத்துவரும் முயற்சிகளுக்கும், கல்விப் பணிக்கும் மத்திய அரசு அளித்துள்ள அங்கீகாரம் இது.**

இந்நிலையில், மத்திய திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் அமைச்சகத்தின் பயிற்சிப் பிரிவு தலைமை இயக்குநரகம் சார்பில், தேசிய அளவிலான ஐடிஐ கல்வி நிறுவனங்களின் தர மதிப்பீட்டுக் குழு கூட்டம் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி நடந்தது. இதில், நாட்டிலேயே சிறந்த 33 தனியார் ஐடிஐ தொழிற்பயிற்சி நிலையங்கள் பட்டியலில், அரியலூர் பிஏசி ராமசாமி ராஜா ஐடிஐ 3-வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

இது, சமூகப் பொறுப்பு நிதி வாயிலாக ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் எடுத்துவரும் முயற்சிகளுக்கும், அதன் கல்விப் பணிக்கும் மத்திய அரசு அளித்துள்ள அங்கீகாரம் ஆகும் என்று ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஏ.வி. தர்மகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். ●